பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 06 வெள்ளிக்கிழமை 19.03.2021 கதிர் 02

## பூசகர் உட்பட 4 பேருக்கு கொரோனாத் தொற்று!

**மஸ்கெலியாவில் இந்துக் கோயில் மூடல்**

மஸ்கெலியாவிலுள்ள இந்துக் கோயில் ஒன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பூசகர் உட்பட நால்வருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்தே சுகாதாரத் தரப்பினரால் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## மாகாண சபைத் தேர்தலுக்குத் தயாராகுங்கள்!

### ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குப் பணிப்பு

மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகுமாறு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அரச உயர்மட்டத் தலைவர்களால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதன்படி எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் 9 மாகாண சபைகளுக்கும் தேர்தலைநடத்துவதேஅரசின்எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இந்நிலையில், ஆளுங்கட்சி ☞2

## முப்பது இலங்கையர்கள் மூன்று படகுகளில் லட்சதீவு அருகே ஆயுதங்களுடன் சிக்கினர்!

### 300 கிலோ ஹெரோயினுடன் கைது காலியிலிருந்து புறப்பட்டவர்களாம்!

**(ந.லோகதயாளன்)**

**இலங்கையின் காலி பகுதியில் இருந்து புறப்பட்ட படகுகள் மூன்று லட்சதீவு அருகே இந்திய கரையோரப் பாதுகாப்பு படையினரால் ஆயுதங்களுடன் சிக்கியுள்ளன என்று இந்தியத் தரப்பு செய்தி வெளியிட்டுள்ளது.**

**3 படகுகளிலும் 30 இலங்கையர்கள் உள்ளனர் எனவும், 300 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள்களும் படகுகளில் காணப்படுகின்றன எனவும் இந்தியக் கரையோரக் காவல் படையினர் அறிவித்துள்ளனர்.**

☞2

## சொத்துக் குவிப்பு வழக்கு: அமைச்சர் ரோஹித விடுதலை

சட்டவிரோதசொத்துக்குவிப்புதொடர்பில் இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்திருந்த வழக்கில் இருந்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சராகச்செயற்படும்போதுரோஹித அபேகுணவர்தன 412 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமாகக் கையகப்படுத்தினார் என்று இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

குறித்த வழக்கு இன்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் ஆதித்யா பட ☞2

## கொழும்பில் ஏட்டிக்குப் போட்டியாக ஆசிரியர் சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

### கல்வி அமைச்சுக்கு முன்னால் அமைதியின்மை



பத்தரமுல்லையிலுள்ள கல்விஅமைச்சுக்குமுன்னால் ஆசிரியர் சங்கங்களால் முன்னெடுக்கப்படும் இருவேறு ஆர்ப்பாட்டங்களால் அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

அரசுக்கு எதிரான வகையில் சங்கமொன்றும், அரசுக்கு ஆதரவான வகையில் மற்றுமொரு சங்கமும் ☞2

## அச்சுறுத்தல், அடக்குமுறைகளுக்கு மத்தியில் மட்டக்களப்பில் நீதிகோரிய போராட்டம் இன்று



மட்டக்களப்பு,மார்.19

தமிழர்களுக்கு சர்வதேச நீதிகோரி பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் மத்தியில் மட்டக்களப்பில் மாபெரும் பேரணியும் போராட்டமும் இன்று முன்னெடுக்கப்பட்டன.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப்பேரணி இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த நீதிகோரிய எழுச்சிப்பேரணி முன்னெடுக்கப்பட்டது. ☞2

## வடக்கில் யுத்தத்துக்குப் பின் பல அபிவிருத்தித் திட்டங்கள்

### யாழில் அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளோம்.



– இவ்வாறு அஞ்சல் சேவைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். ☞2

## உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை

### கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை போன்றவற்றை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- பரீட்சைகளை ஒத்திவைப்பது ☞2

## மே மாதத்துக்குப் பின் இ.தொ.காவின் தலைவர் நியமனம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவர் எதிர்வரும் மே மாதத்துக்குப் பின்னர் நியமிக்கப்படவுள்ளார் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த ஆறுமுகன் தொண்டமான் உயிரிழந்து 10 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனாலும், இ.தொ.காவின் தலைமைப் பதவி இன்னும் வெற்றிடமாகவே உள்ளது. ☞2

தொழினுட்பப் பிரிவு

விஸ்டம்

A/L 2023
2021 Day

பொறியியற் தொழினுட்பவியல்

K.ரவிக்குமார் (Dip in Tech, NCTT, PGDE)
P.சண்முகதாசன் (Rtd Instructor Buildings - SLTES)
R.சிவரூபன் NCECP, NCT (Electrical & Electronic)
R.நிரூஜன் B.Sc
M.சுதாகரன் NDT, B.Ed
P.கிருபாகரன் NDT (Const Tech)
P.கணேஸ் NDT Automobile, (Instructor Automobile)

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

P.விமலநாதன் B.Sc
R.நிரூஜன் B.Sc
A.அரவிந்தன் B.Sc (Hons) Spel in Chem, PGDE
S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

P.நிரோஜனன் B.Sc (Bio Technology)
M.விஸ்ணுதேவன் B.Sc (Agri), PGDE
P.S.ஷாணஸ் B.Sc (Agri)

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்

S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

விவசாய விஞ்ஞானம்

P.S.ஷாணஸ் B.Sc (Agri)

புவியியல்

S.ஶ்ரீகிருஸ்ணா BA (Hons), PGDE (Merit)

கணிதம் (7)

S.தர்சன் B.Sc (Hons), PGDE (Merit)
M.கோபிஸ்கண்ணா NDT (Maths)

ஊடகக் கற்கை

S.கோணேசலிங்கம் Dip in Media

சித்திரம்

S.கருணாகரன் NDT, B.Ed

077 248 7774
076 552 9093

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

## முப்பது இலங்கையர்கள்….

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30 பேரிடம் இருந்தும் 5 ஏ.கே. ரகத் துப்பாக்கிகளும் மேலும் சில கைத்துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன. ஏ.கே. ரகத் துப்பாக்கிகளுக்கான ஆயிரம் தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆயுதங்கள், போதைப் பொருள்கள் சகிதம் படகுகளுடன் கைது செய்யப்பட்டவர்கள் இதுவரை இந்தியாவின் கரைக்குக் கொண்டுவரப்படாமையால் மேலதிக தகவல்களைப் பெற முடியவில்லை.

இந்தியக் கரையோரக் காவல்படையின் வான், கடல் கண்காணிப்பு அணிகள் ஒன்றிணைந்து முன்னெடுத்த இந்த நடவடிக்கையின் போது லட்சதீவுகளில் ஒன்றான மினிகோ தீவுக்கு அருகே இந்தப் படகுகள் மடக்கப்பட்டன.

லட்சத்தீவுகள் (Lakshadweep) இந்தியாவிலுள்ள யூனியன் பிரதேசங்களில் ஒன்று. இதன் தலைநகரம் கவரத்தி ஆகும். இது மொத்தம் 30 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட 36 தீவுகளாக அமைந்துள்ளது. கேரளக் கரைக்கு அப்பால் 200 முதல் 300 கிலோ மீற்றர் தூரத்தில், அரபிக் கடலில் இது உள்ளது. லட்சத்தீவுகள் கேரள உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது.

## மே மாதத்துக்குப் பின்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமானின் மறைவின் பின்னர் தலைமைத்துவம் தொடர்பில் இ.தொ.காவுக்குள் மோதல் ஏற்பட்டது. கட்சி பிளவுபடுவதை தடுப்பதற்காக தலைவர் பதவிக்கு எவரும் நியமிக்கப்படவில்லை. தொண்டமானின் மகனான ஜீவன் தொண்டமானுக்கு பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டது.

இறுதிக்கிரியைகள் முடிவடைந்த பின்னர் தேசிய சபை கூடி புதிய தலைவரைத் தெரிவு செய்யும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும், சில தடைகள் தேசிய சபை கூடியும் தலைவர் நியமிக்கப்படவில்லை. 10 மாதங்கள் கடந்துள்ளன.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் உயிரிழந்து எதிர்வரும் மே மாதத்துடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது. அதன் பின்னரே புதிய தலைவர் நியமிக்கப்படக் கூடும் என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சொத்துக் குவிப்பு…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெதிகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவை விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக் குழுவின் ஆணையாளர்கள் மூவரினதும் எழுத்துமூல அனுமதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே, இந்த வழக்கை தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாதென்று கூறி, வழக்கில் இருந்து அமைச்சர் ரோஹிதவை விடுதலை செய்ய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## மாகாண சபைத்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் மாவட்ட தலைவர்களுக்கும், அரச உயர் மட்ட பிரமுகர்களுக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இதன்போதே தேர்தலுக்கு தயாராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது. குறித்த சந்திப்புக்கு முன்னர் ஆளுங்கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களையும் உயர்மட்ட தலைவர்கள் சந்தித்து, கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. என்பனவும் தேர்தலை சந்திப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளை ஆரம்பித்துள்ளன. வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் ஏட்டிக்கு…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே இடத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் நிலையிலேயே அமைதியின்மை ஏற்பட்டது.

அதிபர் மற்றும் கல்வி நிர்வாக சேவையில் காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யுமாறும், அரசியல் நியமனங்களை உடனடியாக நிறுத்துமாறும் வலியுறுத்தி ஜோசப் ஸ்டாலின் தலைமையிலான ஆசிரியர் சங்கங்களின் கூட்டணி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதேநேரத்தில், ஒன்றிணைந்து எமது பலத்தைக் காட்டுவோம் என்று அரசுக்கு ஆதரவான பொதுஜன கல்வி சேவைகள் சங்கத்தால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகின்றது.

இரண்டு ஆர்ப்பாட்டங்களும் கல்வி அமைச்சுக்கு முன்னால் வீதியில் நடத்தப்படும் நிலையில் இரண்டுதரப்பினரும் மோதிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன்போது பொலிஸாரால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இரண்டு தரப்பினரும் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதால் அந்தப் பகுதியூடான வாகனப் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் யுத்தத்து…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.வட்டுக்கோட்டையில் இன்று புதிய தபாலக கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தபால் சேவை என்பது மக்களின் அவசியமான சேவையாகக் காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கவலைப்பட்டாலும் 2010 இற்குப் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2009 இற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களுக்கு காரணமான அரசியல் காரணங்கள் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு திட்டங்களை நாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளோம்.

சுபீட்சத்தின் நோக்கு என்ற எமது அரசின் திட்டத்தின் கீழ் வடபகுதியிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் கிராம மட்டங்களிலும், பிரதேச மட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காலத்திலும் கூட தபால் சேவையானது மிகவும் சிறப்பாகச் செயற்பட்டது. இந்த வைரஸ் தொற்று காலத்திலும் கூட எமது தபால் சேவை ஊழியர்கள் தமது கடமையைச் சிறப்பாக மேற்கொண்டிருந்தனர். அதற்காக எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தை பொறுத்தவரை விவசாயம், கல்வி, உயர் கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளே மிக முக்கிய துறைகளாகக் காணப்படுகின்றன. அத்துடன் இந்தத் துறைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

மேற்குறிப்பிட்ட இந்தத் துறைகளை ஒன்றிணைத்து முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பெரும் உதவியாக இருப்பது இந்தத் தபால் துறை என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். ஒரு இணைப்புக் கருவியாகவே நான் தபால் துறையைக் காண்கின்றேன்.

எமது அரசானது வடபகுதி அபிவிருத்தி தொடர்பில் மிகவும் ஆர்வமாகச் செயல்படுகின்றது.

தபால் துறையை நவீனப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 224 வருடங்கள் பழைமை வாய்ந்த தபால் துறையை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எவ்வாறு முன்னேற்றுவது என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

உலக நாடுகளிலுள்ள தபால் துறையைப் போன்று நமது நாட்டிலும் அதிநவீன வசதிகளைக் கொண்ட வகையில் எமது நாட்டின் தபால் துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் – என்றார்.

## உயர்தரம், புலமைப்பரிசில்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு மட்டத்திலேயே உள்ளது. இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

இது தொடர்பில் நாம் கலந்துரையாட வேண்டியது மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமுமே. அதற்கு எமக்கு கால அவகாசம் வேண்டும்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன் 2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் – என்றார்.

## அச்சுறுத்தல், அடக்கு…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் சர்வதேச நீதிகோரி முன்னெடுக்கப்பட்டுவந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டத்தின் 17 ஆவது நாளான இன்று அதனை நிறைவுறுத்தும் வகையிலும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச நீதிகோரிய வகையிலும் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த போராட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரினால் குறித்த போராட்டத்தில் ஈடுபடுவோர் என்ற ரீதியில் 25பேருக்கு எதிராக நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டிருந்தது.

குறிப்பாக காந்தி பூங்கா, மாமாங்கம் ஆகிய பகுதிகளிலில் போராட்டம் நடத்துதற்கு நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டிருந்ததுடன் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப்பேரணி இயக்கத்தின் வடகிழக்கு ஏற்பாட்டாளர்களான வேலன் சுவாமி, எஸ்.சிவயோகநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருக்கு நேற்று தடையுத்தரவுகள் வீடுகளுக்கு சென்று விநியோகிக்கப்பட்டமையுடன் மாமாங்கேஸ்வரர் ஆலய மதில்களிலும் தடையுத்தரவுகள் ஒட்டப்பட்டிருந்தன.

இன்று காலை மட்டக்களப்பு நகரில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தண்ணீர் பீச்சியடித்துத் தாக்குதல் மேற்கொள்ளும் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தமையுடன் கலகமடக்கும் பொலிஸாரும் நிறுத்தப்பட்டு மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக அச்சநிலையேற்படுத்தப்பட்டிருந்தது.

பொலிஸாரின் அச்சுறுத்தல்கள் மற்றும் நீதிமன்ற தடையுத்தரவுகள் காரணமாக போராட்டம் நடைபெறும் இடம்மாற்றப்பட்டது. மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்திற்குள் தடையுத்தரவு காரணமாக அவை மாற்றப்பட்டு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டியில் முன்னெடுக்கப்பட்டது.

சித்தாண்டு, மாவடிவேம்பு மருங்கையடி பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் ஒன்றுகூடியவர்கள் அங்கிருந்து பேரணியாக சித்தாண்டி சந்திப்பிள்ளையார் ஆலயம்வரையில் பேரணியாக வந்தனர்.

தமிழர் தாயகத்தினை அங்கீகரிக்கவும், இந்திய இராணுவத்தினை தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேறுமாறு வலியுறுத்தியும், மட்டக்களப்பில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதி உண்ணாவிரதம் ஆரம்பித்த இன்றைய தினத்தில் தமிழர்களுக்கான நீதிகோரிய இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமிழர் தாயகப்பகுதியை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும், அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தவேண்டும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச நீதிமன்றம் ஊடாக தீர்வினை வழங்க வேண்டும், ஜநாவில் கொண்டுவரப்பட்ட 46இன் கீழ் ஒன்று தீர்மானத்தினை நிராகரிப்போம், கடத்தப்பட்டுகாணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டும், மேய்ச்சல் தரை நிலத்தினை மீட்டுத்தாருங்கள், எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும் – என்பன உட்பட பல்வேறு கோஷங்கள் இந்த பேரணியின்போது எழுப்பப்பட்டன.

இந்த பேரணி ஆரம்பமான நிலையில் அங்குவந்த ஏறாவூர் பொலிஸார் தடையுத்தரவு உள்ளதாக கூறி போராட்டத்தினை நிறுத்துமாறு கோரிய நிலையிலும் அவற்றினை கருத்தில் கொள்ளாமல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போலியான தடையுத்தரவினைகாட்டிப்பேரணியைதடுக்கமுனைவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களையும் பொலிஸார் வீடியோ புகைப்படம் எடுத்தபோது அதற்கு எதிரான கோசங்களையும் பேரணியில் சென்றோர் எழுப்பினர். தடைகளைத்தாண்டி முன்னெடுக்கப்பட்ட பேரணியானது சித்தாண்டி சந்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு சென்றதும் அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் அங்கு ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு அனுப்பிவைக்கும் மனுவொன்றும் வாசிக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப்பேரணி இயக்கத்தின் வடகிழக்கு ஏற்பாட்டாளர்களான வேலன் சுவாமி, எஸ்.சிவயோகநாதன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், ஞா. சிறிநேசன் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேசசபை உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் இறுதியில் மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் சமாதிக்கு சென்ற பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப்பேரணி இயக்கத்தினர் அங்கு சமாதியில் ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

## பஸ்ஸில் பயணித்த முதியவர் திடீர் சாவு!

மன்னாரில் இருந்து கண்டி நோக்கி பயணித்த அரச பஸ்ஸில் பயணம் மேற்கொண்ட முதியவர் ஒருவர், திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 5.30 மணியளவில், மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் இருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ்ஸில், குறித்த முதியவரும் பயணித்துள்ளார்.

இதன்போது, மன்னார் பிரதான பாலத்தடியிலுள்ள இராணுவ சோதனைச்சாவடியில் பஸ் நிறுத்தப்பட்டு, சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அவ்வேளையிலேயே, குறித்த முதியவர் பஸ்ஸின் இருக்கையில் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ள நிலையில் காணப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அந்த முதியவரின் சடலத்தை, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பாதுகாப்பு பிரிவினர் அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவர் தொடர்பாக இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் நிலைப்பாடு

இந்தப் பத்தியில் நாம் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டி வருகின்றமை போன்று ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரம் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. பெரும்பாலும் வரும் திங்கட்கிழமை இலங்கை மீதான பிரேரணை வாக்கெடுப்புக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரேரணை மீதான பொது விவாதம் திங்களன்று நடைபெறுகின்றது. அதன் பின்னர் அன்றோ அல்லது அடுத்த நாளோ பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடக்கலாம்.

ஆகையினால், அதற்கு முந்திய கடைசி வேலை நாள் இன்றுதான்.

பிரேரணைக்கு நாடுகளின் ஆதரவைத் திரட்டும் விடயத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு போதுமானதல்ல, தீவிரம் அதிகம் வேண்டும் என பிரேரணைக்கு அனுசரணைப் பணி வகுத்து அதனை முன்னெடுக்கும் பிரிட்டன் உட்பட்ட நாடுகள் கருதியமையை அடுத்து, அதுகுறித்து அமெரிக்காவுக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்புகளால் தெரியப்படுத்தப்பட்டதாக அறிய வந்தது.

இதே சமயம், இந்த விவகாரத்தில் இந்தியா என்ன நிலைப்பாடு எடுக்கின்றது என்பது தொடர்பான விடயம் இன்னமுமே தெளிவாகவில்லை. இந்தியா இறுதி நேரம் வரை மதில் மேல் பூனையாகவே தனது நிலைப்பாட்டைத் தொடர்ந்து பேணுகின்றது.

பிரிட்டன் உட்பட ஆறு நாடுகள் முன்வைத்துள்ள பிரேரணையை ஆதரிப்பதன் மூலம் இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதி கிட்டுவதற்கு இந்தியா உதவ வேண்டும் என்ற கோரிக்கை இலங்கைத் தமிழ்த் தரப்புகளிடமிருந்து இந்தக் கடைசி நேரத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் 18 நாள்களில் சட்ட சபைத் தேர்தல்களை எதிர்நோக்கியிருக்கும் தமிழ் நாட்டிலிருந்தும் இத்தகைய கோரிக்கைகள் மத்தியில் ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனதாக் கட்சி அரசுக்கு விடுக்கப்பட்டிருக்கின்றது.

அதற்கு பதிலளிக்குமாற் போல இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பொது நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

"இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் விவகாரம் மிக முக்கியமானது. இலங்கை இனப் பிரச்சினை விடயத்தை தேர்தலுக்கான விவகாரமாக மாற்றும் எண்ணமோ, இலக்கோ நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி அரசுக்கு இல்லை. இது தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் மட்டும் கவனத்தில் எடுத்து தேர்தல் முடிந்து அடுத்த நாள் மறந்து விடக் கூடிய விடயமும் அல்ல. இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதில் மோடி அரசு ஒரே சிந்தனையாக உள்ளது." – என்று கூறியிருக்கின்றார்.

இதேசமயம், இலங்கை விவகாரம் பற்றிக் குறிப்பிடும் போது 'தூண்' விடயத்தை இந்திய வெளியுறவுத் துறை கைவிடுவதாக இல்லை.

அண்மையில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி இந்தத் தூண் விவகாரத்தை பிரஸ்தாபித்தார்.

"இலங்கை – இந்திய உறவு இரண்டு தூணில் தங்கியுள்ளது. ஒன்று – இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடும் இறைமையும். மற்றது – தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் விதத்தில் இலங்கை அரசு இணங்கிய 13 ஆவது திருத்தத்தையும் அதற்கு அப்பாலும் சென்று அதிகாரப் பரவலாக்கத்தை நிறைவு செய்ய வேண்டும். இந்த இரண்டு தூண்களும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன" – என்றார் இந்தியப் பிரதிநிதி மணி பாண்டே.

அதாவது, இலங்கையில் தமிழர்களின் நீதி, நியாயமான எதிர்பார்ப்பை – அபிலாஷையை – நிறைவு செய்தால் மட்டுமே இலங்கை நாட்டின் ஆள்புல ஒருமைப்பாடும் இறைமையும் பேணப்படும் என்று நிபந்தனை விதிக்கும் ஒரு கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தி அவர் அதிர்ச்சியளித்தார்.

அதேசமயம், ஓரிரு தினங்களுக்கு முன்னர் தொலைக்காட்சி ஊடாகக் கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வேறு இரண்டு தூண்கள் குறித்துப் பேசினார்.

"இலங்கை இந்திய இரு தரப்பு உறவாடல் என்பது ஒரு தூண். தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும், அவர்களின் நீண்ட கால அபிலாஷைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது மற்றொரு தூண்." – என்று தெரிவித்திருக்கின்றார் அவர்.

இலங்கை – இந்திய உறவு பேணப்படுவதில் தமிழர்களுக்கு நியாயம் செய்வது என்பது ஒரு நிபந்தனையாகும் என்ற பாரதிய ஜனதாக் கட்சி அரசின் நிலைப்பாடு ஒரு முக்கிய கொள்கை முடிவாகும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இந்தியா பின்பற்றக் கூடிய ஆக்கபூர்வமான நிலைப்பாடு இது. இந்தியாவின் இந்த உறுதிப்பாடு சொல்லில் மட்டுமல்லாமல் செயலிலும் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். அதுதான் தமிழர்களின் ஒரே எதிர்பார்ப்பு.

# படைகளுக்குக் கட்டளையிட்டமை போன்று வீரசேகர நாட்டை நிர்வகிக்கப் பார்க்கிறார்!

## மரிக்கார் எம்.பி. காட்டம்



இராணுவத்தில் சேவையாற்றிய போது படைகளுக்கு கட்டளையிட்டமையைப் போன்று நாட்டை நிர்வகிக்க சரத்வீரசேகர முயற்சிக்கின்றார். அது முடியாது என்று அமைச்சர் சரத் வீரசேகரவிடம் தெரிவிக்க விரும்புகின்றோம். மத்ரஸா பாடசாலைகள் என்றால் என்ன என்பதை முதலில் அவர் புரிந்து கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்–

மத்ரஸா பாடசாலைகளை தடை செய்ய வேண்டும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். இராணுவத்தில் சேவையாற்றிய போது படைகளுக்கு கட்டளையிட்டமையைப் போன்று நாட்டை ஆட்சி செய்ய முடியாது என அவரிடம் தெரிவிக்க விரும்புகின்றோம். மத்ரஸா பாடசாலைகள் என்றால் என்ன என்பதை அவர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

மத்ரஸா பாடசாலைகள் என்பது ஏனைய மதங்களில் காணப்படும் அறநெறிப் பாடசாலைகளை ஒத்ததாகும். எனவே ஒவ்வொருவரின் தேவைக்கமைய இவற்றை தடை செய்ய முடியாது. ஒரு சிலரது தனிப்பட்ட தேவைக்காக வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் கற்பித்தலை முன்னெடுத்தல் உள்ளிட்டவற்றுக்கு தடை விதிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் இதனை கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்து மதகல்வி தொடர்பான சட்டத்தை உருவாக்கி கற்பித்தல் முறைமை ஒழுங்குபடுத்த வேண்டும்.

அவ்வாறில்லாமல் தடை செய்ய அவசியமற்ற விடயங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்று கூறுகின்றமை அநாவசியமான விடயங்களாகும். இவை வெறுக்கத்தக்க பேச்சுக்களாகும் என்பதே எனது நிலைப்பாடாகும். மத்ரஸா பாடசாலைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பில் யாராலும் குற்றஞ்சுமத்த முடியாது என்பதை நாம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளோம். எனவே அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக மக்கள் மத்தியில் பிரச்சினைகளை தோற்றுவிக்க யாருக்கும் இடமளிக்க முடியாது என்பதை அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு நினைவுபடுத்துகின்றோம்.– என்றார்

# கஞ்சாவுடன் 3 இளைஞர்கள் வவுனியாவில் நேற்றுக் கைது!

வவுனியாவில் கஞ்சா பொதிகளுடன் நடமாடிய மூவரை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்துள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் –

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்கள் இடம்பெறுகின்றன எனப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் அப்பகுதிக்கு திடீரென்று சென்ற பொலிஸார் அங்கு சோதனை நடவடிக்கையை மேற்கொண்டபோது உடைமையில் கஞ்சாபொதி வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரையும், திருநாவற்குளத்தைச் சேர்ந்த ஒருவருமாக மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 4 ஆயிரத்து 600 மில்லிகிராம் கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர் எனவும், கைது செய்யப்பட்டவர்கள் வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 19, 23 வயதுடைய இருவரும், திருநாவற்குளத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவருமே ஆவர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொண்ட பொலிஸார் குறித்த நபர்களை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பில் விபத்து; ஒருவர் பரிதாபகர சாவு!



மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் சைக்கிள் விபத்தில் பிரதேசவாசி ஒருவர் உயிரிழந்துள்ளார் என வெல்லாளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தும்பங்கேணி, சுரவணையடியூற்று கிராமத்தைச் சேர்ந்த கனகரெத்தினம் கிருபைநாயகம் (வயது 64) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது –

களுவாஞ்சிகுடியிலுள்ள தனது உறவினர் வீட்டிலிருந்து கடந்த புதன்கிழமை இரவு தும்பங்கேணி, சுரவணையடியூற்றிலுள்ள தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கையில் வீதியின் ஓரத்தில் நீர்குழாய் பதிப்பதற்காக வெட்டப்பட்டிருந்த குழிக்குள் விழுந்த நிலையில் உயிரிழந்து காணப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில், களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதிவானின் உத்தரவில் சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

# பெற்ற குழந்தையை மண்ணுக்குள் புதைத்துவிட்டு நாடகமாடிய தாய்!

வவுனியா பம்பைமடு பகுதியில், பெற்ற குழந்தையை மண்ணுக்குள் புதைத்த தாயொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பம்பைமடுவில் வசிக்கும் 4 பிள்ளைகளின் 36 வயதான தாயொருவர் கடந்த திங்கட்கிழமை குழந்தை ஒன்றைப் பெற்றுள்ளார். எனினும் பிறந்த குழந்தையை தான் வசிக்கும் காணியில் குழி தோண்டி புதைத்துள்ளார்.

கடந்த காலத்தில் தாயின் உடல் மாற்றத்தை அவதானித்த சிலர் கேள்வி எழுப்பியபோது, தனது வயிற்றில் கட்டி இருப்பதாகத் தெரிவித்து வந்த குறித்த தாய், தொடர்பில் சந்தேகம் கொண்ட ஒருவர் கிராம சேவகருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், பொலிஸாரின் ஊடாக குறித்த சம்பவம் தொடர்பில் விசாரிக்கப்பட்டது.

இதன்போது குறித்த தாய் தான் பெற்றெடுத்த குழந்தையை மண்ணுக்குள் புதைத்தமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தாய், தான் குழந்தையைப் பிரசவிக்கவில்லை எனத் தெரிவித்த நிலையில், அவரை வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்து பரிசோதித்த போது அவர் குழந்தையை பிரசவித்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதன் அடிப்படையில் தாயாரை பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளனர்.

குறித்த தாய் கடந்த சில வருடங்களாக கணவனை பிரிந்து வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாரதிய ஜனதாவுக்கு ரூ.8,000 கோடி சொத்து

அரசியல் கட்சிகள் தங்கள் செலவுகளுக்காக நிறுவனங்கள்மற்றும்பொதுமக்களிடம்நிதிவசூலித்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

தேர்தல் பத்திரம் மூலமாகவும், காசோலை வாயிலாகவும் நன்கொடைகளை பெற்றுக்கொள் ளலாம். இவ்வாறு நிதி வசூல் செய்து அரசியல் கட்சிகள் ஏராளமான சொத்துக்களை சேர்த்து வைத்துள்ளன.

இது சம்பந்தமாக ஜனநாயக சீர்திருத்த அமைப்பு அனைத்துக் கட்சிகளுடைய சொத்து விவரங்களை தணிக்கை செய்து அதுபற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில் பாரதிய ஜனதா, காங்கிரஸ், பகுஜன்சமாஜ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் மொத்த சொத்து மதிப்பு ரூ.14,000 கோடியாக உள்ளது.

இதில் பாரதிய ஜனதா கட்சியில் மட்டும் ரூ.8,000 கோடி சொத்து இருக்கிறது. இது மொத்த தேசிய கட்சிகளின் சொத்துக்களில் 54.29 சதவீதமாகும்.

அனைத்து மாநில கட்சிகளின் சொத்து ரூ.5,000 கோடியாக உள்ளது. ஒட்டுமொத்த கட்சிகளில் உள்ள பணத்தில் 58 சதவீதம் 7 தேசிய கட்சிகளிடம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பா.ஜ.க. முதலமைச்சர் வேட்பாளராக மேற்குவங்கத்திற்கு ஸ்வபன் தாஸ்குப்தா

மேற்குவங்க சட்டமன்றத் தேர்தலில், பா.ஜ.க. முதலமைச்சர் வேட்பாளராக, முன்னாள் எம்.பி.யும், செய்தியாளருமான ஸ்வபன் தாஸ்குப்தா (Swapan Dasgupta) அறிவிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

திரிணாமுல் காங்கிரஸ் மாநிலங்களவை எம்.பியாக இருந்த அவர், மேற்குவங்கத்தின் தாரகேஸ்வரர் சட்டமன்ற தொகுதி பா.ஜ.க. வேட்பாளராக அறி விக்கப்பட்டார்.

இதையடுத்து, தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்த ஸ்வபன் தாஸ்குப்தா, தீவிர வாக்குச்சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

## அயோத்தி ராமர் கோயிலுக்கு 300 கிலோ எடையுள்ள பூட்டு




உத்தரபிரதேசம், அலிகரில் 300 கிலோ எடையுள்ள பூட்டை வயதான தம்பதியினர் உருவாக்கியுள்ளனர். இது குறித்து பேசிய அத்தம்பதியினர், ஒரு வருடத்திற்கும் மேலாக இப்பூட்டை தயாரித்து வருவதாக கூறினர்.

பூட்டின் நீளம் 6 அடி 2 அங்குலமும், அகலம் 2 அடி 9.5 அங்குலமும் உள்ளதாக கூறும் அவர்கள், சாவியின் எடை 12 கிலோ எடையுடன் தயாரித்து உள்ளதாக தெரிவித்தனர்.

இந்த மிகப்பெரிய பூட்டை, அயோத்தியில் உருவாகவுள்ள ராமர் கோயிலுக்கு தயாரித்து வருவதாக கூறியுள்ளனர்.

## கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிப்பு எச்சரிக்கை அவசியம்: ரிசர்வ் வங்கி ஆளுநர்



கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிப்பது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் கூறிய அவர், அரசின் நடவடிக்கைகள் காரணமாக கொரோனாவால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் மீட்சி கண்டு வருவதாக தெரிவித்தார். தற்போதைய பாதிப்பு விரைவிலேயே கட்டுப்படுத்தப்பட்டு விடும் என ரிசர்வ் வங்கி கருதுவதாக கூறிய அவர் நாட்டின் சந்தையானது சீராக செயல்பட ரிசர்வ் வங்கி தொடர்ந்து உதவும்.என்றார்.

## இங்கிலாந்து பட்மின்டன் தொடர் ஒற்றையர் காலிறுதி விவரம்

பேர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் அனைத்து இங்கிலாந்து பட்மின்டன் சம்பியன்ஷிப் தொடரின் நேற்றைய போட்டிகளின் முடிவில் காலிறுதிக்கு தெரிவாகுபவர்களின் பட்டியல் வெளியாகியுள்ளது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தரவரிசையில் முதலிடத்திலுள்ள கென்ரோ மோமோ, இரண்டாவது சுற்றில் இந்தியாவின் பிரனாயை தோற்கடித்து காலிறுதியில் தரவரிசையில் பத்தாமிடத்திலுள்ள அமெரிக்காவின் லீ ஸி ஜியாவை எதிர்கொள்கிறார்.

இந்தியாவின் லக்ஷியா சென் நெதர்லாந்தின் மார்க் கல்ஜோவையும் ஒற்றையர் ஆண்கள் தரவரிசையில் 14 ஆம் இடத்திலுள்ள சீனாவின் கட்னா சுனெயமா மூன்றாமிடத்திலுள்ள டென்மார்க்கின் அன்ட்ரெஸ் அன்ரன்சென்னையும் தாய்லாந்தின் சித்திக்கொம் தரவரிசையில் இரண்டாம் நிலையிலுள்ள டென்மார்க்கின் விக்டர் அக்செல்சென்னையும் சந்திக்கின்றனர்.

தரவரிசையில் ஏழாமிடத்திலுள்ள இந்தியாவின் பி.வி.சிந்து ஐந்தாமிடத்திலுள்ள சீனாவின் அகனே யமகுச்சியை காலிறுதியில் எதிர்த்தாடவுள்ளார். சாய்னா நெவால் காயம் காரணமாக பாதியிலேயே போட்டியிலிருந்து விலகினார்.

இன்னுமொரு காலிறுதியில் டென்மார்க்கின் மியா பிளிச்பெல்ட்டை எதிர்கொள்கிறார் தரவரிசையில் ஆறாமிடத்திலிருக்கும் தாய்லாந்தின் ரட்ச்சனொக். அடுத்த காலிறுதியில் தரவரிசையில் நான்காவதாக இருக்கும் சீனாவின் நொஸோமி ஒகுஹராவும் தாய்லாந்தின் புஸானனும் மோதவிருக்கின்றனர்.







# நாணயச் சுழற்சியில் தோல்வி போட்டியில் வெற்றி

## அசத்தியது இந்தியா!

(போட்டி விவரணம்)

அஹமதாபாத்தில் நடைபெற்ற நான்காவது இருபதுக்கு இருபது போட்டியை 8 ஓட்டங்களால் வெற்றிபெற்றதன் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான தொடரை வெல்வதற்கான வாய்ப்பினை இந்திய அணி தக்கவைத்துக்கொண்டுள்ளது.

முன்னதாக நடந்துமுடிந்த மூன்று போட்டிகளிலும் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் பந்துவீசிய அணிகளே வெற்றிபெற்றிருந்த நிலையில், நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி பெற்ற 185 ஓட்டங்களை தடுத்தாடிய இந்தியா போட்டியில் வென்று ஆச்சரியமளித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெறுவது வெற்றியைத் தீர்மானிக்கும் வாய்ப்புகளை அதிகரிக்கும் என்ற நிலையில் அதில் வென்ற இங்கிலாந்து அணித்தலைவர் ஒயின் மோர்கன், இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

போட்டியின் முதல் பந்திலேயே ரோஹித் ஷர்மா சிக்சரை விளாசியிருந்தாலும் ஆரம்ப வீரர்களிரு வரும் முறையே 12, 14 ஓட்டங்களுக்கு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர். துடுப்பெடுத்தாட வாய்ப்புக் கிடைத்த முதல் போட்டியிலேயே அதிரடியாக விளையாடிய சூர்யகுமார் யாதவ் 3 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகளோடு 57 ஓட்டங்களைச் சேர்த்தார். இவரை ஆட்டமிழக்கச் செய்த பிடியெடுப்பின்போது மூன்றாவது நடுவர் எடுத்த முடிவு சர்ச்சைக்குரியதாக மாறி விவாதங்களை ஏற்படுத்த, ஸ்ரேயாஸ் ஐயரின் 18 பந்துகளிலான 37 ஓட்டங்கள், ரிஷப் பண்ட்டின் 30 ஓட்டங்களினுதவியோடு 185 ஓட்டங்களைச் சேர்த்தது இந்தியா.

ஆர்ச்சர் 33 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்தியாவின் ஓட்டக் குவிப்பைக் கட்டுப்படுத்தியிருந்தார்.

நேரமாக ஆக பனிப்பொழிவு அதிகரித்து பந்து வீசுவோருக்கு சிரமத்தை அளிக்கும் மைதானமென்பதால் பலமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட இங்கிலாந்து இந்த ஓட்ட எண்ணிக்கையை இலகுவாக அடைந்துவிடுமென்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால், இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளர்கள் இங்கிலாந்தின் துடுப்பாட்ட வீரர்களுக்கு தொடர்ச்சியாக அழுத்தத்தை வழங்கி ஓட்டங்களைச் சீரான வேகத்தில் சேர்க்கவியலாமல் தடையேற்படுத்தினர். ஜேசன் ரோய் 40 ஓட்டங்களையும் பென் ஸ்டோக்ஸ் 23 பந்துகளில் 46 ஓட்டங்களை விளாசினாலும் சர்துல் தாக்கூர் முக்கிய தருணத்தில் வீழ்த்திய 3, ராகுல் சாகர் கைப்பற்றிய 2 விக்கெட்டுக்களும் ஹார்திக் பாண்டியா 4 ஓவர்களில் 16 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து எடுத்த 2 விக்கெட்டுக்களும் இந்தியாவுக்கு வெற்றியை உறுதிசெய்தது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சூர்யகுமார் யாதவ் தெரிவானார். இந்தப் போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் தொடரில் 2 - 2 என இரண்டு அணிகளும் சமநிலை பெற்றுள்ளன. ஐந்தாவதும் தொடரின் வெற்றி அணியைத் தீர்மானிப்பதுமான போட்டி நாளைய தினம் நடைபெறவுள்ளது.

# பொலிஸார் மீது நடந்த தாக்குதலில் மெக்சிக்கோவில் 17 பேர் உயிரிழப்பு




மெக்சிக்கோவில் அருகருகே உள்ள இரு நகரங்களில் பொலிஸாரைக் குறி வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் 12 பொலிஸார் உள்பட 17 பேர் உயிரிழந்தனர்.

கோடெபெக் ஹரினாஸ் நகரில் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு சொந்தமான வாகனத்தின் மீது போதைப்பொருள் கடத்தல் கும்பல் துப்பாக்கி சூடு நடத்தியது.

இதில் வாகனத்தில் இருந்த 8 பொலிஸாரும், 5 அரசு வழக்கறிஞர் அலுவலக ஊழியர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தாக்குதல் நடந்த கோடெபெக் ஹரினாஸ் நகருக்கு அருகில் உள்ள அல்மொலொயா நகரில் நடந்த மற்றொரு தாக்குதலில் 4 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

# பிரான்ஸில் இன்று முதல் ஒரு மாதத்திற்கு ஊரடங்கு

பிரான்ஸில் ஒரு மாத காலத்திற்கு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் பாரிஸ் உள்ளிட்ட அதன் முக்கிய பகுதிகளில் பாடசாலைகள் மற்றும் புத்தகக் கடைகள் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 16 நகரங்களில் முழு ஊரடங்கு அமுலில் இருக்கும். பிரான்ஸ் கொரோனாவின் மூன்றாம் அலையை சந்தித்து வருவதாக அந்நாட்டு பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் அறிவித்துள்ளார்.

நேற்று ஒரே நாளில் புதிதாக 35 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று இரவு தொடங்கி ஒரு மாத காலத்திற்கு இந்த ஊரடங்கு அமுலில் இருக்கும்.இதனிடையே பிரான்ஸ், ஜேர்மனி போன்ற சில நாடுகள் ஒஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி பாதுகாப்பானது என்று ஐரோப்பிய மருத்துவ ஏஜன்சி அறிவிப்பை அடுத்து தடுப்பூசி செலுத்துவதை தொடங்கியுள்ளன.

# கொரோனா ஆன்டிபாடிகளுடன் பிறந்த முதலாவது குழந்தை

## ஆச்சரியத்தில் மருத்துவர்கள்

கொரோனா நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற, இரவு பகல் பார்க்காமல் உழைத்த பல முன்கள பணியாளர்களுக்கு நோய்த் தாக்கும் அபாயம் அதிகம் இருந்ததால், முன்கள பணியாளர்களுக்கு முதலில் தடுப்பூசி செலுத்த வேண்டும் என உலக நாடுகள் முடிவு செய்தன.

அதன்படி, அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் சுகாதார பணியாளராக வேலை செய்து வந்த ஒரு பெண்மணிக்குக் கடந்த ஜனவரி மாதம் தடுப்பூசி செலுத்தப்பட்டது. அப்போது அந்த பெண்மணி 9 மாத கர்ப்பிணியாக இருந்தார். அண்மையில் அவருக்குப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் ரத்த மாதிரிகள்சேமிக்கப்பட்டுஆய்வுகள்மேற்கொள்ளப்பட்டன. அதில் மருத்துவர்களுக்கு ஆச்சரியமான முடிவுகள் கிடைத்தன. கொரோனவை எதிர்க்கும் ஆன்டிபாடிகள் குழந்தையின் ரத்த மாதிரியில் இயற்கையாகவே இருந்தன. இதன் மூலம், உலகில் கொரோனவை எதிர்க்கும் ஆன்டிபாடிகளுடன் பிறந்த முதல் குழந்தையாக இந்த குழந்தை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆன்டிபாடிகள் மூலம், குழந்தைகளால் கொரோனா வைரஸைத் தொடர்ந்து எதிர்கொள்ள முடியுமா என்றும் மருத்துவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

# கொரோனா உலக நிலைவரம் 12 கோடியைத் தாண்டியது

உலகம் முழுவதும் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 12.18 கோடியைத் தாண்டியுள்ளது. இறப்புகளின் எண்ணிக்கை 26.92 லட்சமாக அதிகரித்துள்ளது.




கொரோனா நோய்த்தொற்று கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக உலகம் முழுவதும் பரவி பாதிப்பை ஏற்படுத்தி அச்சுறுத்தி வரும் நிலையில், நேற்றைய நிலைவரப்படி உலகம் முழுவதும் இதுவரை 12,18,17,583 பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்களில் 26,92,699 பேர் உயிரிழந்துள்ளனர். 9,82,06,646 பேர் பூரண குணமடைந்துள்ளனர். சுமார் 2,09,18,238 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனா. அவர்களில் 88,955 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

உலகிலேயே மிகவும் மோசமான பாதிப்புக்குள்ளான நாடாக அமெரிக்கா உள்ளது. அங்கு இதுவரை தொற்றினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3,02,94,798 கோடியைத் தாண்டியுள்ளது. இறப்பு எண்ணிக்கை 5 லட்சத்து 50 ஆயிரத்து 649 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா தொற்றுப் பாதிப்பில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. அங்கு இதுவரை 1,14,74,302 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 1,59,250 பேர் உயிரிழந்துள்ளனர். மூன்றாவது இடத்தில் உள்ள பிரேஸிலில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1,17,00,431 ஆக உயர்ந்துள்ளது. நேற்று ஒரே நாளில் 90,830 பேருக்கு தொற்று பாதிப்பு ஏற்பட்டதோடு 2,736 பேர் உயிரிழந்துமுள்ளனர். உலகின் கொரோனாத் தொற்று பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கைப் பட்டியலில் பிரேஸில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அங்கு இதுவரை 2,84,775 பேர் இறந்துள்ளனர். மூன்றாவது இடத்திலுள்ள மெக்ஸிக்கோவில் இதுவரை 1,95,908 பேர்பலியாகியுள்ளதாகபுள்ளிவிவரங்கள்தெரிவிக்கின்றன.

# சீனத் தடுப்பூசியை எடுத்து கொண்டார்

## பாகிஸ்தான் பிரதமர்



சீனாவில் தயாரான சினோபார்ம் தடுப்பூசியின் 5 லட்சம் டோஸ்கள் கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி பாகிஸ்தான் நாட்டுக்கு நன்கொடையாக அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கு அடுத்த நாள் பாகிஸ்தானில் கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் தொடங்கின.

அந்நாட்டில் 6.15 லட்சம் பேர் பாதிக்கப்பட்ட நிலையில், பெப்ரவரி தொடக்கத்தில் சுகாதார பணியாளர்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. கடந்த 10 ஆம் திகதி முதல் பொதுமக்களுக்கு தடுப்பூசி போடும் பணிகள் தொடங்கின. இதன்படி, முதியோர்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன.

பாகிஸ்தானில் சினோபார்ம் மற்றும் ஆஸ்டிரோ ஜெனெகா தடுப்பூசிகளை தவிர்த்து, ரஷ்யாவின் ஸ்புட்னிக் மற்றும் சீனாவின் கேன்சினோ பையோலாஜிக்ஸ் தடுப்பூசிகளுக்கு அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளன.

எனினும், பொதுமக்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் தடுப்பூசி போட தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் தடுப்பூசி போடும் பணி தொய்வடைந்தது.

இந்த நிலையில், சீனாவின் 2வது கட்ட சினோபார்ம் தடுப்பூசிகள் ராவல்பிண்டி நகரில் உள்ள நூர் கான் விமான தளத்திற்கு வந்து சேர்ந்தது. இதனை அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் பெற்று கொண்டனர். இதனை தொடர்ந்து, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் இன்று எடுத்து கொண்டுள்ளார்.

# கர்ப்பிணி பெண்ணை கொலை செய்து அவரது வயிற்றில் இருந்த குழந்தையை திருடிய பெண்

பிரேஸிலில் நேற்று மதியம், பமீல்லா பெரீரா (21) என்ற கர்ப்பிணி இளம்பெண், கொடூரமாக தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டார். அவரது வயிற்றில் இருந்த குழந்தையையும்காணவில்லை. குழந்தையை பொலிஸார் தேடிக்கொண்டிருந்தபோது அதே நேரத்தில், அருகிலுள்ள மருத்துவமனை ஒன்றிற்கு 22 வயதுள்ள பெண் ஒருவர் குழந்தை ஒன்றுடன் சென்றுள்ளார். ஆனால், அந்த குழந்தை இறந்திருந்தது.

வீட்டில், தானே குழந்தை பெற்றுக்கொண்டதாகவும், குழந்தையுடன் படியிலிருந்து இறங்கும்போது தடுக்கி விழுந்துவிட்டதாகவும் அந்தப் பெண் கூறியுள்ளார் ஆனால், மருத்துவர்கள் அவரை பரிசோதித்தபோது அதற்கான அடையாளங்கள் எதுவும் அவரிடம் இல்லை. சந்தேகமடைந்த மருத்துவமனை நிர்வாகம் பொலிஸாருக்கு தகவலளித்தது. பொலிஸ் விசாரணையில், அந்த பெண் கர்ப்பமுற்றிருப்பதுபோல் நடித்து வந்ததும், சம்பவம் நடப்பதற்கு முன்தினம், அவர் பமீல்லாவுடன் கூட இருந்ததும் தெரியவந்துள்ளது.



குழந்தை எப்படி இறந்தது என்பதை அறிவதற்காக, அதற்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்பதற்காக பெண் ஒருவர் ஒரு கர்ப்பிணிப்பெண்ணை கொடூரமாக கொலை செய்து, அவரது வயிற்றை கிழித்து குழந்தையை எடுத்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பிரேஸிலில் ஒரே நாளில் 90,303 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியது

பிரேஸிலில் நேற்று ஒரே நாளில் 90 ஆயிரத்து 303 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாவுக்கு 2 ஆயிரத்து 648 பேர் பலியாகி விட்டதாகவும் பிரேஸில் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவர்களையும் சேர்த்து அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக, பிரேஸிலில் 2 லட்சத்து 82 ஆயிரம் பேர் கொரோனாவால் உயிரிழந்தனர்.

கொரோனாவை கட்டுப்படுத்துவதில் அதிபர் ஜெயிர் போல்சநோரோ தோல்வி அடைந்து விட்டார் என பெரும்பான்மையான மக்கள் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் 4 ஆவது முறையாக புதிய சுகாதார அமைச்சரை நியமித்துள்ளார் அவர்.

DMI JAFFNA
A/L - 2K23
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் :- மார்ச் 20
9am
077 848 0604

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிழக்கு மாகாண பொசன் போய தின நிகழ்வுகள்



இந்த வருடத்திற்கான கிழக்கு மாகாணத்தின் பொசன் போயா தின பிரதான நிகழ்வுகள் பௌத்தர்களின் முக்கிய புனித வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகத் திகழும் தீகவாபி புண்ணிய ஸ்தலத்தில் இடம்பெற உள்ளதாக பாதுகாப்புச் செயலாளரும் கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்யும் ஜனாதிபதி செயலணியின் தலைவருமான ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட புனித வாஸ்துக்கள், பொசன் போய தின நிகழ்வின் போது பக்தர்களின் தரிசனங்களுக்காக வைக்கப்பட உள்ளதாகவும் ஏனைய பக்தர்களின் தரிசனங்களுக்காக அவை பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சம்பூர் பாட்டாளிபுரம் பகுதியில் புலிகளின் ஆயுதக் கிடங்கு அகழ்வு



சம்பூர் ,மார்ச் 19

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாட்டாளிபுரம் பகுதியில் உள்ள காணியொன்றில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதக் கிடங்கு இருப்பதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று மாலை அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

எனினும், இதன்போது அங்கிருந்து எதுவிதத் தடயங்களும் மீட்கப்படவில்லை.

மூதூர் நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஐ.முபாரிஸ் மேற்பார்வையில் இந்த அகழ்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புத்திக்க ராஜபக்ஷ, இராணுவ அதிகாரிகள், பாட்டாளிபுரம் கிராம உத்தியோகத்தர் உள்ளிட்டோர் பிரசன்னமாகியிருந்தனர்.

குறித்த இடத்தில் யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளின் மருத்துவமனை இருந்ததுடன், யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கைக் கடற்படை முகாம் இருந்து விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை டிப்போ விவகாரம் தொடர்ந்தும் இழுபறி நிலை



சம்மாந்துறை டிப்போ விவகாரம் தொடர்பில் தொடர்ந்தும் இழுபறி நிலையில் உள்ள விடயங்களை ஆட்சேபித்து சம்மாந்துறை டிப்போவை கல்முனையுடன் இணைக்கும் செயற்பாட்டை உடனடியாக நிறுத்துமாறு கோரி இன்றும் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே அவர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சந்தித்து பேசினார்.

இதன்போது சம்மாந்துறை டிப்போவானது அதிக இலாபம் ஈட்டும் ஒரு நிலையம் என்பதையும் அந்த பிரதேசத்தில் ஏன் இந்த டிப்போ தேவை அதன் அவசியங்கள் குறித்தும் விளக்கியதுடன் இது தொடர்பில் உடனடியாக சிறந்த தீர்வை பெற்றுத்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் அமைச்சரை கேட்டுக்கொண்டார். இதன்போது பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே அவர்கள் இது தொடர்பில் தான் எதுவும் அறிந்திருக்கவில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் எடுத்த முடிவே இது என்றும் தெரிவித்தார். மேலும் இது தொடர்பில் உரியவர்களிடம் தீர ஆலோசித்து நல்ல முடிவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தருவதாகவும் அதுவரை அவகாசம் தேவை என்பதை நாடாளுமன்ற உறுப்பினருக்கு விளக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

# கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ள முன்னாள் உறுப்பினர் அரியத்துக்கும் தடை

மட்டக்களப்பு,மார்ச் .19

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசு கட்சியின் ஊடகச்செயலாளருமான பா.அரியநேத்திரனுக்கு மட்டக்களப்பு – காந்தி பூங்காவில் இன்று காலை 9 மணிக்கு நடைபெற்ற சாத்வீக கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ள முடியாதவாறு நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.



இன்றைய தினம் (19) வடகிழக்கு தமிழ் மக்களின் அவலநிலைக்கு நீதிவேண்டி சர்வதேசத்திற்கு பல அம்சக்கோரிக்கைகளுடன் மட்டக்களப்பு அரசடி தொடக்கம் காந்திப்பூங்கா வரையிலான கண்டனப்பேரணியில் கலந்து கொள்வதற்கு எதிராகவே பொலிஸாரால் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

# இளைஞன் சடலமாக மீட்பு

திருகோணமலை,மார்ச் 19

அநுராதபுரம், விகார ஹல்மில்லகுளம், பியந்த மாவத்தையைச் சேர்ந்த அமரதுங்க ஆராய்ச்சிக்கே மது சம்பத் பிரசாத் குமார (24 வயது) எனும் இளைஞன், திருகோணமலை, முதலியார்குளம் குளத்துக்கு அருகில் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வரும் இவர், குடும்பத்தகராறு காரணமாக அவர் கடமையாற்றிக் கொண்டிருந்த இடத்துக்கு முன்னாலுள்ள குளத்துக்கு அருகில் தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

சம்பவ இடத்துக்கு, திருகோணமலை திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எஸ்.எம்.றூமி வருகை தந்து, மரத்தில் தொங்கிய நிலையிலிருந்த சடலத்தை பார்வையிட்டதாகவும் மரணத்தில் எதுவித சந்தேகமும் இல்லை என உறவினர்கள், பொலிஸாரிடம் கூறியதை அடுத்து, சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொள்ள மாநகர முதல்வர் சரவணபவனுக்குத் தடை

மட்டக்களப்பு,மார்ச் 19

மட்டக்களப்பு – காந்தி பூங்காவில் இன்று காலை 9 மணிக்கு நடைபெற்ற சாத்வீக கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ள முடியாதவாறு நீதிமன்றத் தடை உத்தரவானது காத்தான்குடி பொலிஸாரால் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் அவர் களுக்கு நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வினை பெற வேண்டி இன்று மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று பொது சிவில் அமைப்புகள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது.



குறித்த போராட்டம் தமிழர்களின் உரிமைக்கான போராட்டமாகும். வடக்கில் இந்த போராட்டம் எந்த ஒரு தடையுத்தரவும் இன்றி நடைபெற்றது. இருப்பினும் மட்டக்களப்பில் குறித்த போராட்டத்திற்கு தடைகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

அதன் ஒரு பகுதியாக தனக்கும் போராட்டத்தில் கலந்துகொள்ள தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# 64ஆம் கட்டை காணி அளவீடு ஊர்மக்கள் கடுமையான எதிர்ப்பு



திருகோணமலை,மார்ச் 19

திருகோணமலை, 64ஆம் கட்டைப் பகுதியில் உள்ள குட்டியாராம விகாரையை சுற்றி, நில அளவையாளர்கள் நேற்று மாலை அளவீடு செய்ய முற்பட்டபோது, பொதுமக்கள் கடும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 64ஆம் கட்டைப் பகுதியில் குட்டியாராம விகாரை மலை உச்சியில் அமைந்துள்ளது. அதனைச்சுற்றி மக்களுடைய காணிகள் இருப்பதாகவும் விகாரைக்கு 300 ஏக்கர் காணி தேவைப்படுவதாகக் கூறி வருவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதன்போது, குட்டியாராம விகாரையைச் சுற்றியுள்ள மலைப்பகுதியை அளவீடு செய்வதற்கு தங்களது விருப்பத்தை தெரியப்படுத்தி இருந்தபோதிலும், தாம் குடியிருந்து வரும் காணிகளையும் சுற்றி அளவீடு செய்ய முயற்சிப்பதாகவும் இதனால் தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்துவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, குறித்த இடத்துக்கு அளவீடு செய்ய வருகை தந்த நில அளவையாளர்கள் மீண்டும் திரும்பிச் சென்றதாகவும் சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று பார்வையிட்டதாகவும் தெரிய வருகின்றது.

# மத்திய கிழக்குக்கு பணிப்பெண்களாக செல்வோரின் நலன்களில் அரசு அக்கறையுடன் செயற்பட வேண்டு

மூதூர் ,மார்ச் 19

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்ணாகச்சென்று, அந்நியநாட்டுச்செலாவணியை நாட்டுக்குப்பெற்றுத்தரும் பணிப்பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டுமென மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்தார்.

மூதூர் பிரதேச சபை அமர்வு நேற்று நடைபெற்றபோது, தனிநபர் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'குடும்ப வறுமையின் காரணமாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்லும் பெண்கள், வீட்டு உரிமையாளர்களினால் சம்பளம் வழங்கப்படாமலும், உடல், உளரீதியானதுன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் வருகின்றார்கள்.

'வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூலம் வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்கள் தொடர்ந்தும் இவ்வாறான சொல்ல முடியாத துயரங்களை எதிர்கொண்டு வருவதானது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மீதும், அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகின்றது.

'நாட்டுக்கு அதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளும் முகமாக வெளிநாட்டில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் வேலைவாய்ப்புப் பணியகம், வேலைக்குச் செல்லும் நபர்களுடைய நலன்கள் தொடர்பில் கண்காணிக்கும் முகமாக அவர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணிவர வேண்டியது அவசியம்.

'குறைந்தது மாதத்துக்கு ஒரு முறையாவது அவர்களுடைய நலன்கள் தொடர்பில் அறிந்துகொள்ளும் பொறிமுறையை உருவாக்க வேண்டும். இவ்வாறான நாடுகள் மனித உரிமைகள் செயற்பாட்டில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் நாட்டுப் பிரஜைகளினுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது' என குறிப்பிட்டுள்ளார்.

# விமலுக்கும் குற்றவிசாரணை நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சந்தேகத்தின் அடிப்படையிலேயே அஸாத்ஸாலி கைதுசெய்யப்பட்டுள்ளார் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்ட அமைச்சர் விமல் வீரவன்ஸவின் கருத்துக்கள் தொடர்பிலும் குற்ற விசாரணைப்பிரிவு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே அஸாத் ஸாலி பல்வேறு கருத்துக்களை கூறிக் கொண்டிருந்தார்.

அவருக்கு இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது தற்போதைய அரசாங்கமேயாகும். காரணம் தற்போதைய அரசாங்கம் அடிப்படைவாதத்தை அடிப்படையாக் கொண்டதாகும். அடிப்படைவாதம் இல்லாதொழிக்கப்பட்டால் அரசாங்கத்தின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும்.

எவ்வாறிருப்பினும் சட்டத்திற்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும். அத்தோடு அஸாத் ஸாலி தவிர்ந்த, அமைச்சர் விமல் வீரவன்ஸ உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை அண்மையில் தெரிவித்தார்.

எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தகவல்களைத் தெரிவிக்கும் அமைச்சர்களும் குற்ற விசாரணை பிரிவினால் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்.

அஸாத் ஸாலியின் கருத்து தவறெனில் அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். அதே வேளை விமல் வீரவன்ஸவின் கருத்து தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதுவே ஒரே நாடு ஒரே சட்டமாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சந்தேகத்தின் அடிப்படையிலேயே அஸாத்ஸாலி கைது செய்யப்பட்டுள்ளார் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் என்பவற்றினடிப்படையில் அவதானிக்கும் போது சரத் வீரசேகர தெரிவித்துள்ள விடயம் நகைப்பிற்குரியதாகும் என்றார்.

# கைதிக்குக் ஹெரோயின் கொண்டுசென்றவர் கைது!

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் கைதியொருவருக்கு வழங்குவதற்காக கொண்டு செல்லப்பட்ட ஆடைக்குள் மறைத்து வைத்து ஹெரோயின் போதைப் பொருளை எடுத்து சென்ற சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கைதிகளைப் பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்த உறவினர்களை, சிறைச்சாலையில் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சோதனைச் செய்துள்ளனர்.

இதன்போது கைதியொருவருக்கு வழங்கும் பொருட்டு நபரொருவர் சில ஆடைகளை எடுத்துவந்துள்ளார்.

அந்த ஆடைகளை சோதனை செய்துள்ள புலனாய்வு அதிகாரிகள், அதில் ஆண் காற்சட்டை ஒன்றுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து எடுத்துவரப்பட்ட ஹெரோயின் என சந்தேகிக்கப்படும் போதைப் பொருள்களை கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது பொலித்தீனைக் கொண்டு நன்கு சுருள் வடிவில் பொதி செய்யப்பட்டிருந்த, 14 சென்ரி மீற்றர் நீளமான 11 சுருள்களும், 9 சென்ரி மீற்றர் நீளமான சுருள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சுருள்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த ஹெரோயின் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரை கைது செய்த புலனாய்வு பிரிவினர், மேலதிக விசாரணைகளுக்காக அவரை பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# சீனி மோசடியை மறைக்கவே ரவி கருணாநாயக்க கைது!

## சமிந்த விஜேசிறி எம்.பி. ஊகம்

சீனிக்கான இறக்குமதி வரி குறைப்பின் மூலம் இடம்பெற்றுள்ள பாரிய மோசடியை மறைப்பதற்காக அரசாங்கத்தால் அரங்கேற்றப்பட்டிருக்கும் நாடகமே முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் கைதாகும்.

அத்தோடு மாகாணசபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சீனி மோசடியை மறைப்பதற்காகவே கைது செய்யப்பட்டுள்ளார். தற்போது இந்த விடயம் பேசுபொருளாகியுள்ளதால் நாட்டு மக்கள் சீனி மோசடியை மறந்து விடுவார்கள்.

சீனி மோசடி மாத்திரமன்றி காடழிப்பு உள்ளிட்ட விடயங்களை மறைப்பதற்காகவும் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்திலும் மத்திய வங்கி பிணை முறி மோசடிக்கார்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்குமாறு பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களான நாம் தொடர்ச்சியாக குரல் கொடுத்தோம்.

எனினும் தற்போது மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படாமல் ரவி கருணாநாயக்க போன்றோர் கைது செய்யப்பட்டுள்ளமை வெறும் நாடகம் மாத்திரமேயாகும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருடைய சகாக்கள் இதனுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் என்று தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியிலிருந்த போது கூச்சலிட்டது.

அவ்வாறெனில் ஏன் அவர்கள் கைது செய்யப்படவில்லை? ஆனால் தற்போது சீனி மோசடியை தடுப்பதற்காக தற்காலிக நாடகமொன்றை அரங்கேற்றியுள்ளனர். இதனை மக்கள் நன்கு அறிவார்கள்.

மாகாணசபைத் தேர்தலை இலக்காக் கொண்டு இந்தக் கைது இடம்பெற்றுள்ளதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. எனினும் பிணை முறி மோசடியுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய வேண்டாம் என்று நாம் ஒருபோதும் கூறவில்லை. எனினும் இதனை விட பாரிய மோசடி சீனி மோசடியாகும். இதனை நியாயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. – என்றார்.

# அஸாத்தின் கைது சட்டவிரோதமானது!

## தேசிய ஐக்கிய முன்னணி தெரிவிப்பு

அஸாத்ஸாலியின் கைது சட்டவிரோதமானது, அரசாங்கத்துடன் இருக்கும் கடும்போக்குவாதிகளை திருப்திப்படுத்தும் நோக்கிலேயே அவரது கைது அமைந்துள்ளதென தேசிய ஐக்கிய முன்னணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எமது கட்சியின் தலைவர் அஸாத் ஸாலியின் கைது சட்ட விரோதமானது என்பதையும், அது அரசாங்கத்தினதும் அதை ஆதரிக்கும் கடும்போக்கு இனவாதிகளினதும் உள் நோக்கங்களை பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்துள்ளது என்பதை ஊடகங்களுக்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். அவரது சட்ட விரோத கைதானது இலங்கை அரசியல் யாப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள அவரின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றான அவரது பேச்சு சுதந்திரத்தை மீறும் ஒன்றாகும்.

அஸாத்ஸாலி எல்லா வகையான தீவரவாதப் போக்கையும், குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியில் அவ்வாறான போக்கை கடுமையாக எதிர்ப்பவர். ஏப்ரல் 21 தற்கொலைத் தாக்குதல் குண்டுதாரிகள் மற்றும் சந்தேகத்துக்குரிய இஸ்லாமிய தீவிரவாத குழுக்கள் என்பனவற்றுக்கு எதிரான அவரது நிலைப்பாடு கடந்த ஆண்டுகளில் அவர் நடத்திய நூற்றுக் கணக்கான ஊடக மாநாடுகள் மூலம் மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டம் மற்றும் முஸ்லிம் தனியார் சட்டம் என்பன பற்றிய அவரது கூற்று ஊடகங்களால் ஒட்டுமொத்தமாக திரிபுபடுத்தி கூறப்பட்டுள்ளன. இதனால் இந்த விடயத்தில் சுய ஆர்வம் உள்ள சிலர் அது பற்றிய முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். இந்த குறிப்பிட்ட ஊடக சந்திப்பின் முழுமையான ஒளிப்பதிவு மற்றும் இது சம்பந்தமான விளக்கங்கள் என்பன பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்துக்கு ஊடகங்களால் தவறான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளமை பற்றி அஸாத்ஸாலியும் ஒரு முறைப்பாட்டை செய்துள்ளார். இதன் தொடராக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தான் ஏற்கனவே கூறிய விடயங்கள் பற்றி அஸாத் ஸாலி தெளிவான விளக்கமொன்றையும் வழங்கி உள்ளார்.

பொலிஸ் ஊடக அறிக்கைகளின் படி அவர் (ஐ.சீ.சீ.பீ.ஆர்.) சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் என்பனவற்றின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உயிர்த்த ஞாயிறு சம்பவம் பற்றி ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு அந்த விடயத்தில் அஸாத் ஸாலிக்கு தொடர்பு உள்ளதாக ஓர் இடத்திலேனும் குறிப்பிடவில்லை என்பதை இங்கே மிக முக்கியமாக அவதானிக்க வேண்டி உள்ளது.

அஸாத் ஸாலி சட்டமா அதிபரின் ஆலோசனையின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளரும் அறிவித்துள்ளார். எனவே சம்பந்தப்பட்ட ஊடக அறிக்கை மற்றும் அது சம்பந்தமான ஆவணங்கள் என்பனவற்றை ஆராய்ந்து அதன் பிரகாரம் அவரை விடுதலை செய்யுமாறு சட்ட மா அதிபரை நாம் கேட்டுக் கொள்கிறோம். – என்றுள்ளது.

# அர்ஜூன மகேந்திரனை நாடு கடத்தும் கோரிக்கை: 3 ஆம்கட்ட ஆவணங்களை சிங்கப்பூர் பரிசீலனை

மத்திய வங்கியில் கடந்த 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி இடம்பெற்ற, அரசாங்கத்துக்கு 68 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியமை முதல் பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய முதலாவது பிரதிவாதியான முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்கு நாடு கடத்துவதற்காக, சட்ட மா அதிபரால் மூன்றாவது தடவையாகவும் அனுப்பப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் விளக்கங்கள் சிங்கப்பூர் சட்ட மா அதிபரால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று நேற்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க இதனை கொழும்பு முதலாவது நிரந்தர மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

முதலாவது நிரந்தர மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றின் நீதிபதிகளான சம்பா ஜானகி ராஜரத்ன, தமித் தொட்டவத்த மற்றும் நாமல் பலல்லே ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த விவகாரம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே முதலாவது பிரதிவாதியால் குறித்த மேற்படி அறிவித்தல் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த வழக்கின் 10 ஆவது பிரதிவாதியான பேர்ப்பச்சுவல் ட்ரெஸ் நிறுவனத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய அஜஹான் கார்திய புஞ்சிஹேவாவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நோக்கில், இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் மலேஷியாவுக்கான இலங்கைத் தூதரகம் ஊடாக மலேஷிய அரச அதிகாரிகளுக்கு அறிவித்தல் அனுப்புவதற்கும் நீதிபதிகள் குழாம் இதன்போது உத்தரவிட்டது.

இந் நிலையில், அர்ஜுன மகேந்திரன் மற்றும் அஜஹான் கார்திய புஞ்சிஹேவா ஆகிய பிரதிவாதிகளை மன்றில் ஆஜர்ப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் மன்றுக்கு அறிவிப்பதற்காக, இவ்வழக்கு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2021 இல் வெளியிடப்பெற்றது.